16.09.2025

ST.C: 15-2021
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.09.2025
அ.சா. 1 –ராஜகோபால் , வயது.46/2025, த/பெ. நாராயணசாமி
(எதிரி ஆஜர்..)

## எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி–

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட தகவலின் அடிப்படையில் நான் 2018–ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட கூட்டாண்மை ஒப்பந்தம் போலியானது என கூறுகிறேன் என்றால் சரி. வழக்கிற்கு பிறகு இந்தப் பத்திரம் வாங்கப்பட்டுள்ளது என்று நான் கூறுகிறேன் என்றால் சரி.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் மேற்படி கூட்டாண்மை ஒப்பந்தம் ஏற்பட்ட பத்திர எண் BU–560390 எப்போது வாங்கப்பட்டது என்ற தகவலை கோரவில்லை என்றால் சரி. அதேபோல் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் முத்திரைத்தாள் விற்பனையாளர் விற்பனை செய்த பத்திர எண் 3712/2018 என்பது எந்த தேதியில் விற்கப்பட்டது என்ற தகவலை கோரவில்லை என்றால் சரி.

அய்யப்பன் என்பவரை எனக்குத் தெரியாது. மேற்படி கூட்டாண்மை ஒப்பந்த பத்திரம் அய்யப்பன் என்பவரால் வாங்கப்பட்டுள்ளதாக கண்டுள்ளது என்றால் சரி. மேற்படி கூட்டாண்மை ஒப்பந்த பத்திரத்தில் முத்திரைத்தாள் விற்பனையாளர் பிழையாக தேதியை எழுதியுள்ள காரணத்தாலும், வழக்கறிஞரின் உடல்நிலை சரியில்லாத காரணத்தினாலும் மேற்படி தேதி பிழையாக ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. கூட்டாண்மை நிறுவனத்திற்கு எதிராக வழக்கு தொடராமல், தனி நபருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளது நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

**Typed down to my dictation, in my presence and hearing, and under my personal direction and superintendence and admitted by the witness to be correct.**

**(Sd/-……..S. Dineshkumar, 16.09.2025)**
**Vedaranyam(F.A.C.)**